# தமிழ் வகுப்பேடு

**வகுப்பு : பத்து** **இயல் - 1 தமிழ்ச்சொல்வளம்** (உரைநடை)

விடையளி :

1. **தமிழ்ச் சொல்வளம் பற்றி கால்டுவெல் கூறுவன யாவை?**

**தமிழ்ச் சொல்வளம் பற்றி கால்டுவெல் கருத்து :**

தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும் போது , தமிழிலுள்ள ஒருபொருட் பலசொல் வரிசைகள் அவற்றில் இல்லாக்குறை எந்தத் தமிழறிஞருக்கும் மிகத் தெளிவாகத் தோன்றும். தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டு தமிழுக்கே சிறப்பாக உரியனவாக கருதப்படும் சொற்கள் மட்டுமன்றி , தெலுங்கு , கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்கு உரியனவாக கருதப்படும் சொற்களும் தமிழிலுள என்கிறார் கால்டுவெல்.

2. **ஒரு தாவரத்தின் அடிப்பகுதி மற்றும் கிளைப் பிரிவுகளுக்கு வழங்கும் சொற்களை தொகுத்தெழுதுக.**

**அடிவகை :**

- தாள் : நெல் , கேழ்வரகு
- தண்டு : கீரை , வாழை
- கோல் : நெட்டி , மிளகாய்
- தூறு : குத்துச்செடி , புதர்
- தட்டை : கம்பு , சோளம்
- கழி : கரும்பு
- கழை : மூங்கில்
- அடி : புளி , வேம்பு

**கிளைப்பிரிவுகள் :**

- கவை : அடி மரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை
- கொம்பு : கவையின் பிரிவு
- கிளை : கொம்பின் பிரிவு
- சினை : கிளையின் பிரிவு
- போத்து : சினையின் பிரிவு
- குச்சு : போத்தின் பிரிவு
- இணுக்கு : குச்சியின் பிரிவு

3.ஒரு தாவரத்தின் பூ , பிஞ்சு மற்றும் குலை வகைகளுக்கு வழங்கப்படும் சொற்களை அட்டவணைப்படுத்துக.

| பூவின் நிலை | | பிஞ்சு வகை | | குலை வகை | |
|---|---|---|---|---|---|
| அரும்பு | தோற்ற நிலை | பூம்பிஞ்சு | இளம் பிஞ்சு | கொத்து | அவரை துவரை |
| போது | விரியத் தொடங்குதல் | பிஞ்சு | இளம் காய் | குலை | கொடி முந்திரி |
| மலர் | மலர்ந்த நிலை | வடு | மாம்பிஞ்சு | தாறு | வாழை குலை |
| வீ | விழுந்த நிலை | மூசு | பலாப் பிஞ்சு | கதிர் | சோளம் கேழ்வரகு |
| செம்மல் | வாடின நிலை | கவ்வை | எள் பிஞ்சு | அலகு (அ) குரல் | நெல் தினை |
| | | குரும்பை | தென்னை பனை | சீப்பு | வாழை தாற்றின் ஒரு பகுதி |
| | | முட்டு குரும்பை | சிறு குரும்பை | | |
| | | இளநீர் | முற்றாத தேங்காய் | | |
| | | நுழாய் | இளம் பாக்கு | | |
| | | கருக்கல் | இளநெல் | | |
| | | கச்சல் | வாழை பிஞ்சு | | |

4. தாவரங்களின் இலை வகைகள் குறித்தும் , நுனிப் பகுதியைக் குறித்தும் வழங்கப்படும் சொற்களை தொகுத்தெழுதுக.

தாவரங்களின் இலை வகைகளை குறிக்கும் சொற்கள் :

இலை : புளி , வேம்பு

தாள் : நெல் , புல்

தோகை : சோளம் , கரும்பு

ஓலை : தென்னை , பனை

சண்டு : காய்ந்த தாள் , தோகை

சருகு : காய்ந்த இலை

நுனிப்பகுதி :

தாவரங்களின் நுனிப்பகுதிகளை குறிக்கும் சொற்கள் :

தளிர் : நெல் , புல்

கொழுந்து : புளி , வேம்பு

குருத்து : சோளம் , கரும்பு , தென்னை , பனை

கொழுந்தாடை : கரும்பு

5. பழங்களின் மேற்பகுதியை குறிக்க வழங்கும் சொற்கள் பற்றியும், கெட்டுப்போன காய்கனிக்கும் வழங்கும் சொற்களைப் பாடத்தின் வழி விளக்குக.

பழங்களின் மேற்பகுதியை குறிக்க வழங்கும் சொற்கள் :

தொலி - மிக மெல்லியது

தோல் - திண்ணமானது

தோடு - வன்மையானது

ஓடு - மிக வன்மையானது

குடுக்கை - சுரையின் ஓடு

மட்டை - தேங்காய் நெற்றின் மேற்பகுதி

உமி - நெல் , கரும்பு முதலியவற்றின் மூடி

கொம்மை - வரகு , கேழ்வரகு முதலியவற்றின் உமி

கெட்டுப்போன காய் , கனிவகைகளை குறிக்க வழங்கும் சொற்கள் :

## கெட்டுப்போன காய் கனி வகைகள்

கெட்டுப்போன காய்க்கும் கனிக்கும் தாவரத்திற்கேற்ப வழங்கும் சொற்கள்

| | |
|---|---|
| சூம்பல் | நுனியில் சுருங்கியகாய் |
| சிவியல் | சுருங்கிய பழம் |
| சொத்தை | புழுபூச்சி அரித்த காய் (அ) கனி |
| வெம்பல் | சூட்டினால் பழுத்த பிஞ்சு |
| அளியல் | குளுகுளுத்த பழம் |
| அழுகல் | குளுகுளுத்து நாறிய பழம் (அ) காய் |
| சொண்டு | பதராய்ப் போன மிளகாய் |
| கோட்டான் காய் | கோட்டான் உட்கார்ந்து கெட்ட காய் |
| அல்லிக்காய் | தேரை அமர்த்ததினால் கெட்ட தேங்காய் |
| ஒல்லிக்காய் | தென்னையில் கெட்ட காய் |

6. தாவரங்களின் இளம் பருவச் சொற்கள் பற்றியும் , தானிய வகைகளுக்கு வழங்கும் சொற்கள் பற்றியும் விளக்குக.

இளம் பயிர் வகை :

| | | |
|---|---|---|
| நாற்று | : | நெல் , கத்தரி |
| கன்று | : | மா , புளி |
| குருத்து | : | வாழை |
| பிள்ளை | : | தென்னை |
| குட்டி | : | விளா |
| மடலி | : | பனை |
| பைங்கூழ் | : | நெல் , சோளம் |

தானியங்களுக்கு வழங்கும் சொற்கள் :

| | | |
|---|---|---|
| கூலம் | : | நெல் , புல் |
| பயறு | : | அவரை , உளுந்து |
| கடலை | : | வேர்கடலை , கொண்டைகடலை |
| விதை | : | கத்தரி , மிளகாய் |
| காழ் | : | புளி , காஞ்சிரை |
| முத்து | : | வேம்பு , ஆமணக்கு |
| கொட்டை | : | மா , பனை |
| தேங்காய் | : | தென்னையின் வித்து |
| முதிரை | : | அவரை , துவரை |

7. பண்டைத் தமிழர் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்தனர் என்பதை உன் பாடத்தின் வழி நிறுவுக.

பண்டைத் தமிழ்மக்கள் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவர் :

ஒரு மொழி பொது மக்களாலும் அதன் இலக்கிய புல மக்களாலும் அமையப்பெறும். தமிழ் மக்கள் உயர்ந்த பகுத்தறிவு உடையவர்கள். ஒரு நாட்டு வளத்திற்கு தக்கப்படியே அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும். நாட்டின் தனிப்பெரும் வளத்தினாலேயே , பண்டைத் தமிழ் மக்கள் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்திருக்கின்றனர். திருந்திய மக்களை மற்ற உயிரிலிருந்தும் பிரித்துக் காட்டுவது மொழியாதலின் , அதுவே ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கு சிறந்த

வழியாகும். பொருளை கூர்ந்து நோக்கி நுண்பாகுபாடு செய்து அவற்றிற்கேற்ப பருபொருட் சொற்களும் , நுண்பொருட் சொற்களும் அமைத்து கொள்வது சிறந்த பண்பாடு உடைய மக்கட்கே இயலும்.

சிறுவினா :

1. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது . இது போல் இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
    - நீரின்றி பைங்கூழ் வாடியது.
    - நிலத்தடி நீர்மட்டம் குறையாதிருக்க மடலியை நட வேண்டும்.
    - நடவு செய்ய கத்தரி நாற்றுகளை பறித்தேன்.
    - நேர்த்தி கடன் செலுத்த தென்னம் பிள்ளைகளை வாங்கினேன்.
    - மா , புளி , வாழை முதலிய கன்றுகளை போதிய இடைவெளி விட்டு நட வேண்டும்.

நெடுவினா :

1. தமிழ் சொல்வளம் பற்றியும் , புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

தமிழின் சொல்வளம் , புதிய சொல்லாக்கத்திற்கான தேவை :

காலை வெள்ளத்தில் கரைந்து போன மொழிகளுக்கிடையில் நீந்தி தன்னை நிலை நிறுத்தி கொண்டுள்ளது தமிழ் மொழி. என்ன வளம் இல்லையென்று சொல்லும் அளவிற்கு எண்ணிலடங்கா சொல்வளம் உடையதாக தமிழ் மொழி விளங்குகிறது.

ஒரு மொழி பொது மக்களாலும் அதன் இலக்கியம் புல மக்களாலும் அமையப்பெறும். தமிழ் மக்கள் தனிப்பெரும் நாகரிகத்தையும் , உயர்ந்த பகுத்தறிவையும் உடையவர்கள்.

திருந்திய மக்களை பிற உயிர்களிடத்தில் இருந்து பிரித்து காட்டுவது மொழி ஆகும். அதுவே ஒரு நாட்டாரின் , இனத்தாரின் நாகரிகத்தை அளப்பதற்கான அளவுகோலாக இருப்பதால் சொல்வளமும் , புதிய சொல்லாக்கத்திற்கான தேவையும் அவசியமாகிறது.

2. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்தாய் வாழ்த்து பாடலையும் பெருஞ்சித்திரனாரின் வாழ்த்து பாலையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு உருவாக்குக.

சுந்தரனாரின் தமிழ்தாய் வாழ்த்து , பெருஞ்சித்திரனார் தமிழ்தாய் வாழ்த்து ஒப்பீடு :

"எத்திசையும் புகழ் மணக்க இருந்தபெரும் தமிழணங்கே!
உன் சீரிளமை திறம் வியந்து செயல்மறந்து "

என்று தமிழன்னையை வியந்து போற்றுகிறார். என்றும் இளமை மாறாத தமிழன்னைக்கு நீர் நிறைந்த கடலை ஆடையாக உடுத்திய பெண்ணுக்கு , அழகு மிகுந்த முகமாக திகழும் பரத கண்டம் . அக்கண்டத்தில் நெற்றியாக திகழும் தென்னாடும் , அதிலிட்ட மணம் வீசும் திலகமாக திகழும் திருநாடும் சிறப்பு வாய்ந்தன. அதிலிருந்து வரும் வாசனை போல எல்லா திசைகளிலும் புகழ் வீசுகின்ற தமிழ் மகளே! உன் திறமையை வியந்து உன்னிடம் வயப்பட்டோம் என்கிறார்.

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே !
இன்னரும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!

என பாவலரேறு தாய் மொழியாம் தமிழ் மொழியே! அழகுடைய செந்தமிழே! பழமைக்கு பழமையான நறுங்கனியே! குடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்த பேரரசே! பத்து பாட்டே! எட்டுத் தொகையே! பொங்கியெழும் நினைவுகளால் உன்னை தலை வணங்குகிறோம். என்று வாழ்த்துகிறார்.

மனோன்மணீயம் சுந்தரனாரோ தமிழ் மொழியை அன்னையாக உருவகிக்க , பாவலரேறு பெருஞ்சித்திரனாரோ அவ்வன்னையை நூல்களில் அலங்கரிக்கிறார்.